# அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

INTERNATIONAL COUNCIL FOR **EDUCATIONAL DEVELOPMENT OF TAMILS**

## அனைத்துலகப் பொதுத்தேர்வு

# 2025

# தமிழ்

# ஆண்டு 8

நேரம்: 150 மணித்துளிகள்

நாள்: 07.06.2025

மொத்தப்புள்ளிகள்: 100

(எழுதுதல் 85 புள்ளிகள், வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும் 15 புள்ளிகள்)

பக்கங்கள்: 20

சுட்டெண் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

அனைத்துலகத் தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# பகுதி 1 - எழுதுதல்

## 1 மிகப்பொருத்தமான விடைக்குரிய கட்டத்திற்குள் புள்ளடி இடுக.

1. முப்பால் என அழைக்கப்படும் நூல்
    1. நாலடியார்
    2. திருக்குறள்
    3. நல்வழி
    4. கொன்றைவேந்தன்

2. மாரி பொழிகிறது. இதில் மாரி என்பது
    1. பொருளாகுபெயர்
    2. இடவாகுபெயர்
    3. காலவாகுபெயர்
    4. தொழிலாகுபெயர்

3. 75ஆவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
    1. வைரவிழா
    2. பவளவிழா
    3. வெள்ளிவிழா
    4. பொன்விழா

4. வன்னியின் இறுதித் தமிழ் மன்னன்
    1. பண்டாரவன்னியன்
    2. கயிலாயவன்னியன்
    3. எல்லாளன்
    4. சங்கிலியன்

5. எதிர்கால இடைநிலைகள்
    1. கின்று, கிறு
    2. ப், வ்
    3. த், ட், ற், இன்
    4. கிறு, த், ட்

6. புதிதாகச் செய்த தேர், கப்பல் போன்றவற்றை முதன் முதலாகப் பலர் அறிய ஓடவிடுதல்
    1. அரங்கேற்றம்
    2. ஒத்திகை
    3. முன்னோட்டம்
    4. வெள்ளோட்டம்

7. நரம்புக் கருவிகளுள் ஒன்று
    1. தண்ணுமை
    2. ஏழில்
    3. யாழ்
    4. தாளம்

8. கொக்கு உறுமீன் வரும்வரை காத்திருக்கும். இதில் உறு என்பது
    1. பெயர்ச்சொல்
    2. உரிச்சொல்
    3. இடைச்சொல்
    4. உவமையுருபு

9. தமிழ்மொழி தொன்மையான மொழி. தொன்மை என்பதன் எதிர்ப்பொருட் சொல்
   1. இளமை
   2. பசுமை
   3. பழைமை
   4. புதுமை

10. பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் தமிழர் உயர்கல்விக்காகச் சென்ற நாடுகளுள் ஒன்று
   1. மொறிசியசு
   2. தென்ஆபிரிக்கா
   3. அமெரிக்கா
   4. மலேசியா

11. மாணவனுக்குத் தகுந்தது ஒழுக்கம். இதில் வந்துள்ள வேற்றுமை
   1. மூன்றாம் வேற்றுமை
   2. நான்காம் வேற்றுமை
   3. இரண்டாம் வேற்றுமை
   4. ஆறாம் வேற்றுமை

12. கூத்துகள் விடிய விடிய நடைபெறும். இதில் விடிய விடிய என்பது
   1. இரட்டைக்கிளவி
   2. இணைமொழி
   3. அடுக்குத்தொடர்
   4. அடுக்கிடுக்குத்தொடர்

13. மகாகவி து. உருத்திரமூர்த்தி பிறந்த ஊர்
   1. மன்னார்
   2. வவுனியா
   3. சுன்னாகம்
   4. அளவெட்டி

14. கால் + சலங்கை என்பதன் புணர்ச்சி வடிவம்
   1. காற்சலங்கை
   2. காட்சலங்கை
   3. காற்ச்சலங்கை
   4. கால்சலங்கை

15. உழவனுக்கு உழத்தி போல சிறுவனுக்கு
   1. மாணவி
   2. சிறுமி
   3. நடிகை
   4. பாடினி

16. சோழர் ஆட்சிக்காலத்தில் ஈழத்தின் தலைநகராக விளங்கியது
   1. அநுராதபுரம்
   2. நல்லூர்
   3. கண்டி
   4. பொலநறுவை

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

17. இனியா மதி போன்ற முகம் உடையவள். இதில் வந்துள்ள உவமேயம்
   1. மதி
   2. போன்ற
   3. முகம்
   4. இனியா

18. ஆந்தை அலறும். அதுபோல குயில்
   1. கீச்சிடும்
   2. கூவும்
   3. பேசும்
   4. கொக்கரிக்கும்

19. தமிழிசையின் தொன்மைக்குச் சான்றாக விளங்கும் இலக்கியம்
   1. மணிமேகலை
   2. சீவகசிந்தாமணி
   3. சிலப்பதிகாரம்
   4. நளவெண்பா

20. தமிழிலக்கணம் என்பதன் சொற்பிரிப்பு
   1. தமிழி + இலக்கணம்
   2. தமிழ் + இலக்கணம்
   3. தமிழில் + இலக்கணம்
   4. தமிழ் + லக்கணம்

21. அறைகூவல் எனும் மரபுச்சொற்றொடர் குறிக்கும் பொருள்
   1. உறுதுணையாக நிற்றல்
   2. சண்டை போடுதல்
   3. ஏமாற்றுதல்
   4. போருக்கு அழைத்தல்

22. நான் யார்? என்ற கதையில், “நாம் எங்கு சுற்றித்திரிந்தாலும் எங்களது அடையாளங்களை மறக்கக் கூடாது” எனக் கூறியது
   1. குதிரை
   2. ஆடு
   3. ஈ
   4. நாய்

23. கதிரவன் என்பதன் ஒத்தபொருட் சொல்
   1. பகலவன்
   2. விண்
   3. முகில்
   4. வெளிச்சம்

24. நீ பொய் பேசாதே. இச்சொல்லியம்
   1. உடன்பாட்டு ஏவற்சொல்லியம்
   2. எதிர்மறை ஏவற்சொல்லியம்
   3. வினாச்சொல்லியம்
   4. தொடர்ச்சொல்லியம்

25. அழகான ஓவியம் குமரனால்
   1. வரைந்தான்
   2. வரைவான்
   3. வரைகிறான்
   4. வரையப்பட்டது

26. கயிலாயவன்னியனின் அரசு அமைந்திருந்த இடம்
   1. அநுராதபுரம்
   2. திருகோணமலை
   3. பனங்காமம்பற்று
   4. பூநகரி

27. களப்பிரர் என்ற வேற்றினத்தார் தமிழ் நிலங்களை ஆண்ட காலம்
   1. சோழர்காலம்
   2. பல்லவர்காலம்
   3. சங்கமருவியகாலம்
   4. நாயக்கர்காலம்

28. பாடினாள் என்பதன் வினையடி
   1. பாடு
   2. பாடி
   3. பாடிய
   4. பாடின

29. வாய்ப்பாட்டு, கருவியிசை இரண்டும் சேர்ந்த கலை
   1. நடனக்கலை
   2. ஓவியக்கலை
   3. இசைக்கலை
   4. சிற்பக்கலை

30. வாணி வீணை மீட்டுவதில் வல்லவள்.
   இச்சொல்லியத்தில் வல்லவள் என்பது
   1. தெரிநிலைவினை
   2. குறிப்புவினை
   3. செய்வினை
   4. செயப்பாட்டுவினை

| 1 | 2 | 3 | 4 |
|---|---|---|---|

30x1 = 30 **புள்ளிகள்**

## 2 தரப்பட்டுள்ள சொற்களின் பொருள் விளங்கச் சொல்லியம் எழுதுக.

1. முதியோர் இல்லம்:

2. நினைவுக்கல்:

3. பச்சைப்பசேல்:

4. நுண்கலை:

5. நகைச்சுவை:

5 x2 = 10 **புள்ளிகள்**

## 3 தரப்பட்டுள்ள பாடநூல் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.

1. யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரிக்கப்பட்டதன் நோக்கம் யாது?

2. போர்த்துக்கேயர் ஈழத்துக்கு வந்தபோது ஈழத்தில் இருந்த அரசுகளுள் இரண்டை எழுதுக.

3. இலத்தீன் மொழியில் திருக்குறளை மொழிபெயர்த்தவர் யார்?

4. மகாகவி து. உருத்திரமூர்த்தியின் இலக்கியவடிவங்களுள் இரண்டை எழுதுக.

5. வானிலிருந்து வீழ்ந்த மழைத்துளி கடலில் சென்று கலக்கிறது.
   இச்சொல்லியத்தில் வந்துள்ள பெயரெச்சம், வினையெச்சம் என்பவற்றை எழுதுக.
   பெயரெச்சம்: ______
   
   வினையெச்சம்: ______

6. தனிச்சொல்லியங்களைத் தொடர்ச்சொல்லியமாக மாற்றி எழுதுக.
   நாம் நற்குணம் உள்ளவர்களாக வாழ்வோம்.
   நாம் வாழ்வில் உயர்வடைவோம்.

7. அப்பா மரத்தை வெட்டினார். இச்சொல்லியத்தில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு, பொருள் என்பவற்றை எழுதுக.

   வேற்றுமை உருபு: ______

   பொருள்: ______

5x2 = 10 புள்ளிகள்

## 4 பாடலைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.

துணிந்தால் துன்பமில்லை
சோர்ந்துவிட்டால் இன்பமில்லை!

இனிமை கலந்துவரும் பாட்டிலே - மனம்
எதையும் மறந்துவிடும் கேட்டாலே!

கசக்கும் வாழ்விலே கவலைவரும் போதிலே
இனிக்கும் குரலெழுப்ப பறவையுண்டு பாரிலே!

துடிக்கும் இதயங்களே தாளம் - காற்றில்
மிதக்கும் ஓசையெல்லாம் கானம்!

- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

1. பாட்டிலே கலந்து வருவது என்ன?

_______________________________________________

2. காற்றில் மிதக்கும் ஓசை எது?

_______________________________________________

3. துணிந்தால் எது இல்லை?

_______________________________________________

4. பாரில் இனிக்கும் குரலெழுப்புவது எது?

_______________________________________________

5. எப்பொழுது இன்பமில்லை?

_______________________________________________

5 x2 = 10 புள்ளிகள்

## 5 தரப்பட்டுள்ள சொல்லியங்களை உங்கள் வாழிடமொழியில் வாசித்து, தமிழில் மாற்றி எழுதுக.

**ஐக்கிய இராச்சியம் - கனடா:**

1. At Tamil school an art competition was held.
2. Elder sister is going to work by bus.
3. Children played football at the park.
4. People of different races live in the world.
5. Snow falls in winter.

**பிரான்சு:**

1. Le concours de dessin a eu lieu à l'école tamoule.
2. Ma sœur va au travail en bus.
3. Les enfants ont joué au football dans le parc.
4. Il y a diverses ethnies (diverses peuples) qui vivent dans le monde.
5. Il neige en hiver.

**நோர்வே:**

1. Det var tegnekonkuranse på tamilskolen.
2. Storesøster tar bussen til jobb.
3. Barna spilte fotball i hagen.
4. I verden lever det mennesker av forskjellige etnisiteter.
5. Det snør om vinteren.

**இத்தாலி:**

1. Nella scuola Tamil si è svolta la competizione di disegno.
2. La sorella maggiore sta andando a lavoro in bus.
3. I bambini hanno giocato a calcio nel parco.
4. Nel mondo vivono diversi gruppi etnici.
5. In inverno nevica.

**நெதர்லாந்து:**

1. Er werd een tekenwedstrijd gehouden op Tamilschoo.
2. Mijn zus gaat met de bus naar haar werk.
3. De kinderen speelden voetbal in het park.
4. Er leven veel verschillende etnische groepen in de wereld.
5. Het sneeuw licht de winter.

**டென்மார்க்:**

1. Der blev afholdt tegnekonkurrence på tamilskolen.
2. Min storesøster tager bussen på arbejde.
3. Børnene spillede fodbold i blomsterparken.
4. Der bor mange forskellige etniske grupper i verden.
5. Det sner om vinteren.

**சுவீடன்:**

1. En målartävling hölls i tamilskolan.
2. Storasyster åker till jobbet bussen.
3. Pojkarna spelade fotboll i parken.
4. Flera olika etniska grupper lever i världen.
5. Det snöar på vintern.

**பின்லாந்து:**

1. Tamilikoulussa järjestettiin taidekilpailu.
2. Isosisko menee töihin bussilla.
3. Lapset pelasivat jalkapalloa puistossa.
4. Maailmassa elää monia eri kansoja.
5. Talvella sataa lunta.

## தமிழ்:

1. ______________________________

______________________________

2. ______________________________

______________________________

3. ______________________________

______________________________

4. ______________________________

______________________________

5. ______________________________

______________________________

5x2 = 10 **புள்ளிகள்**

## 6 தரப்பட்டுள்ள தலைப்புகளுள் ஒன்றைத் தெரிவுசெய்து 125 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.

1. தாய்நாடு
2. தமிழிசை
3. எனது பொழுதுபோக்கு

   உள்ளடக்கக் குறிப்புகள்:
   - பொதுவான பொழுதுபோக்குகள்
   - விரும்பும் பொழுதுபோக்கு
   - விரும்புவதற்கான காரணம்
4. தொலைக்காட்சி பார்ப்பதால் ஏற்படும் நன்மைகளும் தீமைகளும்

   உள்ளடக்கக் குறிப்புகள்:
   - ஊடகங்களும் தொலைக்காட்சியும்
   - நன்மைகளும் தீமைகளும்
   - உங்கள் கருத்து

15 புள்ளிகள்

# பகுதி 2
# வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

**1. பந்தியை வாசித்து வினாக்களுக்கு முழுமையான விடை எழுதுக.**

**உலகில் எண்ணற்ற உயிரினங்கள் வாழ்கின்றன. அவற்றுள் மாந்தர் மட்டுமே சிந்தித்துச் செயலாற்றும் திறன் உடையோர். மாந்தர் முதலில் ஒலிகளை எழுப்பியும் உடல் அசைவுகளாலும் கருத்துகளை வெளிப்படுத்தினர்; பின்னர் சிந்திக்கும் ஆற்றலும் நாகரிகமும் வளரத் தங்களுக்கென மொழிகளை உருவாக்கிக் கொண்டனர். அம்மொழியே அவ்வினத்தின் தாய்மொழி என்று அழைக்கப்படுகிறது. மொழியானது, ஒவ்வோர் இனத்துக்கும் அடையாளமாக விளங்குகிறது. அத்துடன் அவ்வினங்களின் பண்பாடு, வரலாறு போன்றவற்றை அறியவும் உதவுகிறது. மூத்த மொழியாகிய தமிழ்மொழி எங்கள் தாய்மொழியாக இருப்பது தமிழினத்துக்கே பெருமையாகும். தனக்கென்று ஒரு மொழி உள்ள இனமே இவ்வுலகில் தன்னைத் தக்கவைத்திருக்கும் என்பது வரலாறு கூறும் உண்மை. இதை மனத்திற்கொண்டு நாம் எங்கு வாழ்ந்தாலும் தாயினும் மேலான எமது தமிழ்மொழியைப் பேசவும் கற்கவும் வேண்டும்.**

1. வரலாறு கூறும் உண்மை எது?

_______________________________________________

_______________________________________________

2. மாந்தர் முதலில் எவ்வாறு கருத்துகளை வெளிப்படுத்தினர்?

_______________________________________________

_______________________________________________

3. தமிழினத்துக்குப் பெருமை தருவது எது?

_______________________________________________

_______________________________________________

4. சிந்தித்துச் செயலாற்றும் திறன் உடையவர் யார்?

_______________________________________________

_______________________________________________

5. ஓரினத்தின் அடையாளமாக விளங்குவது எது?

_______________________________________________

_______________________________________________

5 x2 = 10 **புள்ளிகள்**

**2. அறிவித்தலை வாசித்து, தரப்பட்டுள்ள கூற்றுகள் சரியாயின் ✓ எனவும் பிழையாயின் × எனவும் அடையாளம் இடுக.**

## நூல்களின் கண்காட்சி

காந்தரூபன் அறிவுச்சோலை மாணவர்களின் வாசிப்புத்திறனை மேம்படுத்தும் நோக்கில் இக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. இங்கு மாணவர்களுக்கான நூல்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளன.

காலம்: 15.06.2025 ஞாயிற்றுக்கிழமை
காலை 10:00 மணி
இடம்: அறிவுச்சோலை மண்டபம்
ஒழுங்கமைப்பு: காந்தரூபன் அறிவுச்சோலை

மாணவர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

1. கண்காட்சியில் நூல்கள் அறிமுகம் செய்யப்படவுள்ளன. (    )
2. தமிழிசை மண்டபத்தில் கண்காட்சி நடைபெறும். (    )
3. இது காந்தரூபன் அறிவுச்சோலை மாணவர்களுக்கான அழைப்பிதழ். (    )
4. மாணவர்களின் கலைத்திறனை மேம்படுத்துவதற்காக நடைபெறவுள்ளது. (    )
5. கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. (    )

5x1 = 5 புள்ளிகள்

குறிப்பு:

குறிப்பு:

குறிப்பு:

# பணியகப் பயன்பாட்டுக்கு மட்டும்

| வினா எண் | புள்ளிகள் | முதலாம் முறை | இரண்டாம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|

## எழுதுதல்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 15 | | | |

## வாசித்தலும் விளங்கிக்கொள்ளுதலும்

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | 10 | | | |
| 2 | 05 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | முழுப்பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| முதலாம் முறை | | |
| இரண்டாம் முறை | | |
| மேற்பார்வையாளர் | | |